# சங்கரன்கோவில் நகராட்சி

**2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16.12.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு அவசரக்கூட்டம்**

பொருள் எண் : 1062

இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு குத்தகை உரிமக்காலம் 31.03.2021 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 (2021-2022 முதல் 2023-2024) முடிய அரசாணை எண் : 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் : 19.09.2007ல் அரசு வெளியிட்டுள்ள உத்திரவின் அடிப்படையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஏல அறிக்கை மற்றும் ஏல நிபந்தனைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகை உரிமை இனம் | செலுத்தப்பட வேண்டிய பொறுப்பு தொகை |
|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகத்திற்கு கீழ்புறம் நில அளவை எண். 368/19எ.எப் இடத்தில் அமைந்துள்ள நகராட்சி நிரந்தர நாளங்காடியின் ஆர்.சி.சி.கூரை போட்டு அமைக்கப்பட்டுள்ள இரும்பு கதவுள்ள 29 கடைகளும் (கீழ் பக்கமும் தென்பக்கமும் உள்ள நிரந்தர கடைகளும் கேண்டீன் கட்டிடமும் நீங்கலாக) வடபுறத்தில் தற் கட்டப்பட்டுள்ள கடைகள் 1 முதல் 11 முடிய 11 கடைகளும், ஆர்.சி.சி, கூரை உள்ள கதவு இல்லாத கடைகளும் சேர்த்து கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் தினசரி சந்தைக்கு முன் வரும் வாகனாதிகள், தலைச்சுமை மற்றும் பிராணிகள் முதலியவற்றிற்கு அட்டவணையில் கண்டபடி சுங்கம் வசூலிக்கும் உரிமை | ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) |
| 2. | நகராட்சி எல்கை முழுவதிலும் தெருக்களிலும் தெரு ஓரங்களிலும் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை (அண்ணா பேரூந்து நிலைய வளாகத்திலும் மற்றும் வாயிலிலும் மற்றும் கோவில் சந்துகளிலும் கடைகள் வைக்க அனுமதியில்லை) | ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) |
| 3. | திருக்கோவிலுக்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். சுவாமி சன்னதி தெருவில் (திருக்கோவிலுக்கு வரும் வாகனங்களுக்கு) மட்டும் | ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) |
| 4. | நகராட்சியின் புதிய ஆடடிக்கும் தொட்டியில் அறுக்கப்படும் ஆடுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் ஆடடிக்கும் தொட்டியில் சேரும் சாணம், உதப்பி போன்ற கழிவுப் பொருட்களையும் அன்றாடம் சேகரித்து எடுத்துக்கொள்ளும் உரிமை | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) |
| 5. | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட இனங்களில் மீன்பிடித்துக்கொள்ளும் உரிமம் மற்றும் மீன்பாசி எடுக்கும் உரிமம்<br>1. திருநீலகண்டர் ஊரணி<br>2. கோவிந்தப்பேரி தெப்பம்,<br>3. ஆவுடைப்பொய்கை தெப்பம்,<br>4. காந்தி நகர் அருகில் உள்ள ஊரணி<br>5. கூழையாத்து ஓடை,<br>6. வாணியர் ஊரணி<br>7. டபேதார் ஊரணி | ரூ.10,000/- (ரூபாய் பததாயிரம்) |
| 6. | பேரறிஞர் அண்ணா நகர பேரூந்து நிலையத்தின் வடபுறம் இருசக்கர வாகனம் நிறுத்துமிட கட்டண வசூல் உரிமம் | ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) |

| | | |
|---|---|---|
| 7. | பேரறிஞர் அண்ணா நகர பேரூந்து நிலையத்தில் தட்டில் வைத்து முறுக்கு விற்பனை செய்யும் உரிமம் (அண்ணா பேரூந்து நிலைய வளாகத்திலும் மற்றும் வாயிலிலும் கடைகள் வைக்க அனுமதியில்லை) | ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்) |
| 8. | பேரறிஞர் அண்ணா நகர பேரூந்து நிலையத்தில் எடைபார்க்கும் கருவி நிறுவிக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) |
| 9 | பேரறிஞர் அண்ணா நகர பேரூந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் | ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்) |
| 10 | இராமசாமியாபுரம் 7ம் தெருவில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட காலி இடத்தில் ஆட்டு இறைச்சிக் கடை வைத்து வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண் 1) | ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்) |
| 11 | நகராட்சி கிழக்கு மாடவீதியும் வடக்குமாடவீதியும் சந்திக்கும் இடத்தில் கட்டப்பட்டுள்ள பொருள் பாதுகாக்கும் அறையில் வைக்கப்படும் பொருள்களுக்கு கட்டணம் வசூலித்தல் | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) |
| 12 | ராமசாமியாபுரம் 7ம் தெருவில் ஆட்டு இறைச்சி கடைகளுக்கு தென்புறம் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட காலியிடத்தில் சம்பைக்கடை (கருவாடு கடை) வைத்து வியாபாரம் செய்யும் உரிமம் | ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) |
| 13 | பேரறிஞர் அண்ணா பேரூந்து நிலையத்திற்குள் வரும் பேரூந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்) |
| 14. | சுவாமி சன்னதி காந்தி மண்டபம் அருகிலுள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (சுயஉதவிக்குழு மட்டும்) | ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) |
| 15. | அண்ணா பேருந்து நிலையத்தில்உள்ள கட்டண கழிப்பிடம் / குளியல் அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (சுயஉதவிக்குழு மட்டும்) | ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) |

<u>அலுவலகக்குறிப்பு</u>

அ) வரிசை எண் 1 முதல் 15 முடிய உள்ள இனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

ஆ) ஏல விபரத்தை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் / ஏல அறிக்கை அச்சிடுவது மற்றும் அது தொடர்பான செலவு தொகைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் : 1063

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் கோட்டைமலையாறு, தாமிரபரணி மற்றும் மானூர் I, II ஆகிய மூன்று கூட்டு குடிநீர் திட்டங்கள் மூலமாக வடிகால் வாரியம் மூலம் குடிநீர் மூன்று மேல்நிலை தொட்டிகளுக்கு Gas Chlorination Plant and Liquid chlorination plant ஆகியவற்றிற்கு தேவையான Gas chlorine cylinder and Liquid Chlorine வாங்குவதற்கு ரூ.370000-க்கு பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 20.10.2020ல் வரப்பெற்ற கீழ்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Excellent chloro systems என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளது. எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Excellent chloro systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியையும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரிய மன்ற தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதிக்கலாம்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | Excellent chloro systems | 370000 | மதிப்பீட்டுக்குச் சமம் | |
| 2. | Sri Sathya dyen chemicals | 370000 | 4.91% | --- |

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் : 1064

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கக்கன் நகர் மேல்நிலைதொட்டி 2.00 லட்சம் கொள்ளளவு உள்ளது. அந்த மேல்நிலைத் தொட்டியின் சுழல் படிக்கட்டுகள் முழுவதுமாக சேதமடைந்தும் உடைந்தும் உள்ளது. அதனால் படிக்கட்டின் வழியாக மேலே ஏறிச்செல்லவும் உபயோகபடுத்தவும் முடியாது மேலும் தற்போது அங்கு அங்கன்வாடி புதிய கட்டிடம் சட்டமன்ற உறுப்பினர் (திருமதி வி.எம்.ராஜலெட்சுமி) தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணி நடைபெற்று வருகிறது. ஆங்கு செல்லும் குழந்தைகள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மேல்நிலை தொட்டி காவலர்கள் ஆசிரியர் அடிக்கடி சென்று வரும் சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட படி பராமரிப்பு பணி பார்க்க இயலாத நிலையில் உள்ளது. அதனை அகற்றி விட்டு சாரம் அமைத்து கான்கீரிட் படிகள் உடைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ.0.35 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியினை நகராட்சி சட்ட விதி 15 ன்கீழ் மேற்கொள்ளவும் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் திரு கே.நிஜார் என்பவர்மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் : 1065

சென்னை உயர் திரு மன்றம் மதுரைக் (கிளை) வழக்கு எண் 16972 மற்றும் 16973/2020–ன்படி சாலை யோரம் மற்றும் தெரு ஓரங்களில் சுங்கம் வசூலிக்கும் உதிமத்திற்கு தடை கோரி திரு. செல்வகணேஷன், திரு, சேர்மராஜ் என்பவரிகள் ஷை நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர் ஷை வழக்கினை நகராட்சியின் சார்பாக ஆஜராகி வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/– வழங்குவதற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க. எண்.2517/பி2

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் : 1066

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மண்டலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள எதுவாக தகுதிவாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளிகளாக நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு மொத்தம் ரூ.84616/-ல் சங்கரன்கோவில் நகராட்சி பங்கு தொகையாக ரூ.4453/-யை கடையநல்லூர் நகராட்சிக்கு செலுத்துவதற்கு தெரிவித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள்

கடிதம் எண்.1815/2020/ஆ2, நாள் 19.10.2020-ல் மூலம் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் மேற்கண்ட விளம்பரத்திற்கு இந்நகராட்சி செலுத்த வேண்டிய பங்கு தொகை ரூ.4453/-யை கடையநல்லூர் நகராட்சிக்கு செலுத்திட மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2663/2020/எச்1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண் : 1067

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலை திட்டம் 2020–2021ன் கீழ் ரூ15.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.205571/2020/இ3, நாள் 14.12.2020–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு சிறப்பு சாலைகள் திட்ட நிதி ரூ,12.75 கோடியும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.2.25 கோடியும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம்(கி,மீ) | சாலையின் அகலம்(மீ) | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | ரயில்வே பீடர் சாலை மற்றும் மேலரதவீதியில் தார்தளம் அமைத்தல் | 1.915 | 8.00 | 150.00 |
| 2. | கழுகுமலை சாலை (டைவர்சன் ரோடு) மீரான்சேட் காலனி பி எஸ நக ர் காலனி மற்றும் கக்கன் நகரில் தார்தளம் அமைத்தல் | 2.330 | 5.40 | 150.00 |
| 3. | இலவன்குளம் சாலை மற்றும் கோமதியாபுரம் புது 1ம் தெரு பாரதியார் 5ம் தெரு முதல் 8ம் தெரு வரை தார்தளம் அமைத்தல் | 1.770 | 6.60 | 150.00 |
| 4. | வடகாசியம்மன் கோவில் 1ம் மற்றும் 2ம தெரு கீழச்செக்கடி தெரு தேனப்பபுரம் 1 ம் தெரு மற்றும் 2ம் தெரு காந்தி நகர் (பள்ளி சாலை) லெட்சுமியாபுரம் 5ம் தெரு திரு.வி.க தெரு காமராஜ நகர் காமராஜ நகர் முதல் கழிப்பிடம் வரை தார்தளம் அமைத்தல் | 2.530 | 5.40 | 160.00 |
| 5. | காவேரி நகர்( பள்ளி சாலை) மற்றும் வி,ஐ,பி நகரில் தார்தளம் அமைத்தல் | 1.960 | 6.70 | 150.00 |
| 6. | பாரதியார் 4ம் தெரு தீப்பாச்சி அம்மன் நகர் திருவேங்கடம் சாலை குறுக்குத் தெரு லெட்சுமியாபுரம் 7ம் தெரு கீழ் பகுதியில் தார்தளம் மற்றும் மழை நீர் வடிகால் அமைத்தல் | 1.350 | 5.00 | 140.00 |
| 7. | ரயில்வே பீடர் சாலை குறுக்கு சாலை சேர்ந்தமரம் சாலை மற்றும் முல்லை நகர் மற்றும் குறுக்கு 1 2 3 தெருவில் தார்தளம் மற்றும் மழை நீர் வடிகால் அமைத்தல் | 1.750 | 5.90 | 155.00 |
| 8. | திருவள்ளுவர் சாலை மற்றும் கக்கன் நகர் குறுக்கு தெருவில் தார்தளம் அமைத்தல் | 1.900 | 6.30 | 140.00 |
| 9. | சேர்ந்தமரம் குறுக்கு தெருவில் தார்தளம் மற்றும் பாரதியார் 1,2,3ம் தெரு கோமதியாபுரம் 1ம் தெரு மற்றும் 7ம் தெரு காந்திநகர் கீழ 5ம் தெரு கக்கன் நகர் 1ம் தெரு 5ம் தெரு மற்றும் வடகாசியம்மன் கோவில் 2ம் தெருவில் பேவர் | 2.350 | 4.70 | 160.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிளாக் சாலை அமைத்தல் | | | |
| 10. | ராஜபாளைம் மெயின் சாலை சபாபதி நகர் முதல் ரயில்வே பீடர் சாலை வரை மழை நீர் வடிகால் சங்குபுரம் 4ம் தெரு சங்குபுரம் 5ம் தெரு ஒடைத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 0.770 | 5.90 | 145.00 |
| | **மொத்தம்** | **18.625** | | **1500.00** |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சிறப்பு சாலை திட்டம் 2020–2021ன் கீழ் ரூ15.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.205571/2020/இ3, நாள் 14.12.2020–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.( 1074/2020/இ1)

தீர்மானம் – அனுமதிக்கப்படுகிறது

தனி அதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.

நாள் – **16.12.2020.**